Golden Point Award 2023
Tamil Short Story – First Prize
*கழுவேற்றம்* by Priya Rajiv (PRIYADHARSHINI GAJENDRAN)

அவன் முழுக்கவனமும் தாளில் குவிந்திருந்தது. ஐம்புலன்களையும் ஓரிடத்தில் நிறுத்தும் தியான மனநிலையில் இருந்தான். அவன் கைகளில் அசைவில்லை. விரல்கள் மட்டும் அத்தனை மெதுவாக அசைந்தது. இந்த கவனக்குவிப்பினாலும் அறையின் புழுக்கத்தினாலும் வியர்த்தது. அந்த வியர்வைத்துளிகள் கூட வழிந்தால் எங்கே அவன் தவம் கலைந்துவிடுமோ என்று துளிர்த்த இடத்திலேயே தங்கியிருந்தது. உதடு குவித்து, நாவினை இடது தாடைப்பக்கமாய் தள்ளி, வலப்புறமாய் சிறிது தலைசாய்த்து இளம்மொட்டின் நுனிப்பகுதியை வரைந்து முடித்தான். கைகளும் உடலும் தளர்ந்தது. தவம் கலைந்தது. இதுவரை அடங்கியிருந்த ஐம்புலன்களும் விழித்துக்கொண்டன. வியர்வை தன்னிடத்திலிருந்து நகரத்தொடங்கியது. அது தாளின் மீது வீழும் முன்பு நகர்ந்துவிட்டான்.